சாலையில் ஏற்படும் பள்ளங்கள் குறித்து புகார் தெரிவிக்க 'நம்ம சாலை' செல்போன் செயலி: அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் துவக்கினார்

சென்னை, நவ.2–

சாலையில் ஏற்படும் பள்ளங்கள் குறித்து புகார் தெரிவிக்க 'நம்ம சாலை' என்ற புதிய செல்போன் செயலி அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. இதை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கிவைத்தார்.

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில், பள்ளங்களற்ற சாலை என்ற இலக்கை அடைய, சாலையில் ஏற்படும் பள்ளங்களை பொதுமக்களின் துணையோடு கண்டறிந்து, குறித்த காலத்தில் செப்பனிடும் திட்டத்திற்காக "நம்ம சாலை" என்ற புதிய மென்பொருள் மற்றும் செல்போன் செயலி உருவாக்கப்பட்டு உள்ளது.

இதன் தொடக்க விழா நேற்று சென்னை கிண்டியில் உள்ள நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்றது. விழாவுக்கு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு, "நம்ம சாலை" செல்போன் செயலியை தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு "விபத்தில்லா மாநிலம்" என்ற முதலமைச்சரின் தொலைநோக்கு திட்டத்தினை செயல்படுத்த, "பள்ளங்களற்ற சாலை" என்ற இலக்கினை அடைவதற்கு ஏதுவாக, பொதுமக்களின் துணையோடு கண்டறியப்படும் சாலையில் ஏற்படும் பள்ளங்கள் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் சரிசெய்யப்பட வேண்டும் என்பதால், 2023–2024ம் ஆண்டு மானியக் கோரிக்கையின்போது, பிரத்யேக செல்போன் செயலி உருவாக்கப்படும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது.

புகைப்படமும் பதிவேற்றலாம்

அதன் அடிப்படையில், 'நம்ம சாலை' என்ற மென்பொருள் மற்றும் செல்போன் செயலி உருவாக்கப்பட்டது. இந்த செயலியின் மூலம் நெடுஞ்சாலைத்துறையினால் பராமரிக்கப்படும் சாலைகளில் ஏற்படும் பள்ளங்கள் குறித்து பொதுமக்கள் செல்போன் செயலி வாயிலாக, புவி குறியீட்டுடன் கூடிய புகைப்படங்களுடன் பதிவேற்றம் செய்யலாம்.

பதிவேற்றம் செய்யப்பட்ட விவரம் அச்சாலைக்குரிய என்ஜினீயருக்கு செயலி வாயிலாக தெரிவிக்கப்பட்டு, குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் பள்ளங்களை செப்பனிட நடவடிக்கை எடுக்கப்படும். அதன் பிறகு, சரிசெய்யப்பட்ட விவரம், சாலையின் புகைப்படங்களுடன், "நம்ம சாலை" செயலி மூலம் பதிவேற்றம் செய்யப்பட்டு, புகார் அளிக்கும் பொதுமக்களின் செல்போனுக்கு அனுப்பப்படும். அதன்படி, சாலையில் ஏற்படும் பள்ளங்கள் உடனுக்குடன் சீர் செய்யப்படுவது மட்டுமல்லாமல், தடையற்ற போக்குவரத்து உறுதி செய்யப்படும். இச்செயலி மூலம் பள்ளங்கள் குறித்து தெரிவிப்பதுடன் மட்டுமல்லாமல், பேரிடர் காலங்களில் மரம் விழுதல், வெள்ளப்பெருக்கு போன்றவற்றை குறிக்கும் புகார்கள் அளிக்க ஏதுவாக உருவாக்கப்பட்டு உள்ளது.

மேலும், இந்த விழாவில் ரூ.204 கோடியே 70 லட்சம் மதிப்பீட்டில் மேலூர்–திருப்பத்தூர் சாலை, ரூ.198 கோடியே 65 லட்சம் மதிப்பீட்டில் தஞ்சாவூர்–மன்னார்குடி சாலை, ரூ.219 கோடியே 47 லட்சம் மதிப்பீட்டில் விருத்தாசலம்–உளுந்தூர்பேட்டை சாலை ஆகிய இரு வழித்தடமாக அகலப்படுத்தி மேம்படுத்தப்பட்ட சாலைகளையும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்ட இயக்குநர் எஸ்.பிரபாகர், நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர், தலைமை பொறியாளர்கள், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய இயக்குநர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

சென்னையில் எவ்வளவு வேகத்தில் வாகனங்களை ஓட்டலாம்? புதிய வேகக் கட்டுப்பாடு 4ந் தேதி முதல் அமல்

சென்னை, நவ.2–

சென்னையில் எவ்வளவு வேகத்தில் வாகனங்களை ஓட்டலாம்? என்பது பற்றிய புதிய வேக வரம்பு வருகிற 4ந் தேதி முதல் அமலுக்கு வருகிறது.

சென்னையில் பெருகி வரும் வாகனங்களின் எண்ணிக்கையால் போக்குவரத்து நெரிசல் அதிகரித்து வருகிறது. போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தும் வகையில் முக்கிய சாலைகளை ஒரு வழிப்பாதையாக மாற்றி அமைத்தல் போன்ற நடவடிக்கைகளை போக்குவரத்து போலீசார் மேற்கொண்டு வருகின்றனர்.

'பீக் அவர்' எனப்படும் பள்ளி கல்லூரிகள் மற்றும் அலுவலக நேரங்களில் போக்குவரத்து நெரிசலில் சிக்காமல் இருப்பதற்காக சில வாகன ஓட்டிகள் அதிக வேகத்தில் செல்வதும், போக்குவரத்து நெரிசல் இல்லாத நேரத்தில் சில வாகன ஓட்டிகள் மின்னல் வேகத்தில் வாகனத்தை ஓட்டி செல்வதும் விபத்துகளுக்கு வித்திடுகிறது. இதனால் உயிர் பலியும் ஏற்படுகிறது. அப்பாவி பாதசாரிகளும் பாதிக்கப்படுகிறார்கள்.

எனவே சாலை பாதுகாப்பை கருத்தில் கொண்டும், விபத்துகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கையாகவும் சென்னையில் எவ்வளவு வேகத்தில் வாகனங்களை ஓட்டலாம்? என்பது குறித்து 2003ம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட வாகன வேக வரம்பை கடந்த ஜூன் மாதம் அமல்படுத்துவதற்கு சென்னை போலீசார் முயற்சி எடுத்தனர்.

இந்த வேக வரம்பு அடிப்படையில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில், ஆட்டோக்கள் காலை 7 மணி முதல் இரவு 10 மணி வரையில் மணிக்கு 25 கி.மீ. வேகத்திலும், இரவு 10 மணி முதல் காலை 7 மணி வரையில் 35 கி.மீ. வேகத்திலும், கனரக வாகனங்கள் பகலில் 35 கி.மீ. வேகத்திலும், இரவில் 40 கி.மீ. வேகத்திலும், இலகு ரக வாகனங்கள் மற்றும் இரு சக்கர வாகனங்களை பகலில் 40 கி.மீ. வேகத்திலும், இரவில் 50 கி.மீ. வேகத்திலும் ஓட்டலாம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இதற்கு ஆட்டோ டிரைவர்கள், கால்டாக்சி டிரைவர்கள், கனரக வாகன டிரைவர்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு கிளம்பியது. இதனால் இந்த உத்தரவை போக்குவரத்து போலீசார் அமல்படுத்தவில்லை. இந்த நிலையில் வாகன வேக வரம்பை மறுமதிப்பீடு செய்து புதிய வேக வரம்பை நிர்ணயம் செய்வதற்காக போக்குவரத்து துறை கூடுதல் கமிஷனர் தலைமையில் 6 அதிகாரிகள் அடங்கிய குழுவை சென்னை போலீஸ் கமிஷனர் சந்தீப்ராய் ரத்தோர் நியமித்தார்.

இந்த குழுவினர், இந்தியாவின் பெருநகரங்களான மும்பை, டெல்லி, பெங்களூரு, ஐதராபாத் மற்றும் கொல்கத்தா ஆகிய இடங்களில் உள்ள வாகன வேக வரம்பு, சாலை கட்டமைப்பு வசதி, விபத்துகளின் எண்ணிக்கை போன்றவற்றை ஒப்பீட்டு ஆய்வு செய்தனர்.

மேலும் சென்னை ஐ.ஐ.டி., பரிதாபாத்தில் உள்ள சாலை போக்குவரத்து கல்வி நிறுவனத்தின் (ஐ.ஆர்.டி.இ.) பேராசிரியர்களின் ஆலோசனைகளையும் பெற்றனர். அதன் அடிப்படையில் சென்னை மாநகரில் எவ்வளவு வேகத்தில் வாகனங்களை ஓட்டலாம்? என்பது பற்றிய புதிய வேக வரம்பை இந்த குழுவினர் நிர்ணயம் செய்து, தமிழ்நாடு அரசின் ஒப்புதலுக்கு அனுப்பிவைத்தனர். தமிழ்நாடு அரசு ஒப்புதல் கிடைத்தவுடன் இந்த உத்தரவு அமலுக்கு வரும் என்று சென்னை போலீஸ் கமிஷனர் சந்தீப்ராய் ரத்தோர் கூறியிருந்தார்.

தமிழ்நாடு அரசு ஒப்புதல்

இந்த நிலையில் புதிய வேக வரம்புக்கு தமிழ்நாடு அரசு ஒப்புதல் வழங்கி உள்ளது. இதையடுத்து இந்த உத்தரவு வருகிற 4ந் தேதி முதல் அமலுக்கு வரும் என்று சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய வாகன வேக வரம்பு விவரம் வருமாறு:–

★ இலகுரக வாகனங்கள் (கார், மினி ஆட்டோ, மினி வேன்) மணிக்கு 60 கி.மீ. வேகத்திலும் செல்லலாம்.

★ கனரக வாகனங்கள் (பஸ், லாரி) மணிக்கு 50 கி.மீ. வேகத்தில் இயக்கலாம்.

★ மோட்டார் சைக்கிள்கள் மணிக்கு 50 கி.மீ. வேகத்தில் ஓட்டலாம்.

★ ஆட்டோக்கள் மணிக்கு 40 கி.மீ. வேகத்தில் செல்லலாம்.

★ குடியிருப்பு பகுதிகளில் அனைத்து வகை வாகனங்களும் 30 கி.மீ. வேகத்துக்குள்தான் செல்ல வேண்டும்.

இதுதொடர்பாக போக்குவரத்து போலீஸ் அதிகாரி ஒருவர் கூறியதாவது:

சென்னையில் 62 லட்சம் வாகனங்கள் இயங்கி வருகின்றன. எனவே சாலை பாதுகாப்பை கருத்தில் கொண்டு இந்த முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு வாகன ஓட்டிகள் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட வேகத்தில்தான் வாகனங்கள் இயக்கப்படுகிறதா? என்பதை வேக கட்டுப்பாட்டு கருவி மூலம் கண்காணிப்போம். மேலும் நவீன கேமராக்கள் மூலமாகவும் வாகனங்களின் வேகங்கள் கண்காணிக்கப்படும். இதனை மீறும் வாகன ஓட்டிகளிடம் ரூ.1,000 அபராதம் வசூல் செய்யப்படும். மாநகர பஸ் டிரைவர்களும் இந்த உத்தரவை கடைபிடிக்க வேண்டும் என்றார். 2003ம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட வாகன வேக வரம்பு பகல்–இரவு என்று பிரிக்கப்பட்டிருந்தது. புதிய வேக வரம்பில் பகல்–இரவு என்று பிரிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பெயர் மாற்றம் அறிவிப்பு

நான் டேவிட் பால்ஆசீர் த/பெ. டேவிட், பிறந்தது: 10ம் நாள் ஜூலை மாதம் 1957ம் ஆண்டு (சொந்த மாவட்டம் : தூத்துக்குடி) வசிப்பிடம் : எண்.1, பெருமாள் கோவில் தெரு, பெரியார் நகர், இரும்புலியூர், தாம்பரம் மேற்கு, சென்னை–600 045 இது முதற்கொண்டு ஜேக்கப் பால் ஆசீர் டேவிட் என்று அழைக்கப்படுவேன்.

டேவிட் பால்ஆசீர்
எண்.1, பெருமாள் கோவில் தெரு, பெரியார் நகர், இரும்புலியூர், தாம்பரம் மேற்கு, சென்னை–600 045

RELIANCE
Reliance Commercial Finance Limited

பதிவு அலுவலகம்:
தி ரூபி, 11வது தளம், வட மேற்கு விங், மனை எண்.29, சேனாபதி பாபட் மார்க், தாதர் (மேற்கு), மும்பை – 400 028.

கோரிக்கை அறிவிப்பு

கீழ்க்குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள்/ உடன் கடன்தாரர்கள் / உத்தரவாததாரர்கள்/அடைமானதாரர்கள் ஆகியோர் ரிலையன்ஸ் கமர்ஷியல் பைனான்ஸ் லிமிடெட்டில் இருந்து நிதி உதவி பெற்றுள்ளனர். கடன் பெற்ற கடன்தாரர்கள்/ உத்தரவாததாரர்கள்/ அடைமானதாரர்கள் ஆகியோர் பல்வேறு காரணங்களால் தவணைத் தேதிக்கு முன்னதாக அசல் தொகை மற்றும் வட்டியை செலுத்தத் தவறி விட்டனர். ரிலையன்ஸ் கமர்ஷியல் பைனான்ஸ் புத்தகத்தில் உள்ளபடி, சொத்து வகைப்பாடு தொடர்பாக நேஷனல் ஹவுசிங் வங்கியால் வழங்கப்பட்ட உத்தரவின் கீழ் ரிலையன்ஸ் கமர்ஷியல் பைனான்ஸ் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் அந்த கணக்குகள் கீழ்குறிப்பிட்டுள்ள தேதியில் நிறைவேற்றப்படாத ஆஸ்திகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) சட்டம் 2002 விதிகள் மற்றும் மேற்கண்ட சட்டம் பிரிவு 13(12) விதி 3ன்படி அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மேற்கண்ட சட்டம் பிரிவு 13 (2)ன் கீழ் டிமாண்ட் நோட்டீஸ் அனுப்பி உள்ளார். இதில் தொடர்புடைய கடன்தாரர்கள்/உத்தரவாததாரர்கள்/அடைமானதாரர்கள் அறிவிப்பில் கண்டுள்ள தொகை மற்றும் கூடுதல் வட்டி மற்றும் அறிவிப்பில் கண்டுள்ள ஒப்பந்தவிகிதத்திலான தொகை மற்றும் தற்செயல் செலவு, கட்டணம், இன்றைய தேதி வரையிலான கட்டணங்களை இந்த அறிவிப்பு வெளியான தேதியில் இருந்து 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
கடைசியாக தெரிந்த முகவரிக்கு இந்த அறிவிப்புகள் அனுப்பப்பட்டு அது அவர்களால் பெறப்படாமல் திரும்ப வந்துவிட்ட காரணத்தால் அது பொது அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது.

வ எண்	கடன்தாரர் பெயர்/ முகவரி	உடன் கடன்தாரர் மற்றும் உத்தரவாததாரர், இயக்குனர் பெயர்	என்பிஏ தேதி	கோரிக்கை அறிவிப்பு தேதி	செலுத்த வேண்டிய தொகை	கடன் தொகை
1	கடன் கணக்கு எண். RLLRCHE000341522. 1. M/s. S2 பிட்னஸ் ஸ்டுடியோ, பிரதிநிதி பி.ராஜேஷ் குமார் எண்.5, 2வது தளம், கிருஷ்ணா நகர், விவேகானந்தா மெயின் ரோடு, கொளத்தூர், சென்னை 600 099	திரு.ராஜேஷ்குமார் பி, என்.பூபதி,	02.11.2018	20.10.2023	ரூ.68,73,129/– (ரூபாய் அறுபத்தெட்டு லட்சத்து எழுபத்து மூன்றாயிரத்து நூற்று இருபத்தொன்பது மட்டும்)	ரூ.25,00,000/– (ரூபாய் இருபத்தைந்து லட்சம் மட்டும்)

ஈடுபெற்ற ஆஸ்திகள் முகவரி : பிளாட்.எண்.எஸ்3, இரண்டாவது தளம், பிளாட் பெயர் என்.எஸ்.பி பிளாட், மனை எண் 2 & 3, பிளாக் எண்.3, புதிய எண்.126/19, சீனிவாச நகர், 1வது பிரதான சாலை, வில்லிவாக்கம், சென்னை600 049, கிராம நத்தம் ச. எண். 198/2A, புதிய சர்வே எண்.8 இன் படி எண்.71, கொன்னூர் கிராமம், பெரம்பூர் – புரசைவாக்கம் தாலுக்கா, சென்னை மாவட்டத்தில் உள்ள உண்மையில் 2260 சதுர அடி, ஆவணத்தின்படி 2407 சதுர அடி நிலத்தில் பிரிவுபடாத பங்கு நிலம் 230 சதுர அடி மற்றும் 848 சதுர அடி கொண்ட பிளாட் உட்பட. இந்த சொத்து வடசென்னை பதிவு மாவட்டம், கொன்னூர் சார் பதிவு மாவட்டத்தில் உள்ளது. எல்லைகள்: வடக்கு: சாலை, தெற்கு: மனை எண்.4, கிழக்கு: மனை எண்.6 மற்றும் 5, மேற்கு: மனை எண்.1 மற்றும் விஸ்தீரணம் : கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கம் 8.8 மீட்டர், கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கம் 10.4 மீட்டர், வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கம் : 22.9 மீட்டர், வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம் : 16.9 மீட்டர்.

மேலே கூறப்பட்டுள்ள சூழ்நிலையில், மேற்கண்ட கடன்தாரர்கள், உடன் கடன்தாரர்கள் மற்றும்/அல்லது அவர்களின் உத்தரவாததாரர்கள் (எது பொருந்துமோ) ஆகியோர் மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைத் தொகை மற்றும் எதிர்கால வட்டி மற்றும் பொருந்தக்கூடிய கட்டணங்கள் ஆகியவற்றை இந்த அறிவிப்பு வெளியான தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அவ்வாறு செலுத்த தவறும்பட்சத்தில் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 விதிகள் மற்றும் ஈடுபெற்ற மற்றும் நிதி சொத்துக்களை பாதுகாத்தல் மற்றும் சீரமைப்பு பிரிவு 13(4)ன் கீழ் இந்த விளம்பரம் வெளியான தேதியிலிருந்து 60 நாட்களுக்கு பிறகு கூடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு ஈடுபெற்ற ஆஸ்திகள் சுவாதீனம் எடுக்கப்படும்.

மேற்கண்ட சட்டம் பிரிவு 13 (13)ன் கீழ், எந்த கடன்தாரரும் அறிவிப்பில் கண்டுள்ள சொத்துக்களை விற்பனை செய்யவோ, குத்தகைக்கு விடவோ மற்றும் ஈடுபெற்ற ஆஸ்திகள் மீது எந்தவித நடவடிக்கைகளை மேற்கொள்ளவோ, ஈடுபெற்ற கடனாளரால் எழுத்துபூர்வமான அறிவிப்பு இல்லாமல் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாது என்று தெரிவிக்கப்படுகிறது.

தேதி : 02.11.2023 — அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இடம் : சென்னை — ரிலையன் கமர்ஷியல் பைனான்ஸ் லிமிடெட்

Dr.Agarwal's Eye Hospital Limited
3rd Floor, Bujari Towers, No.4 Moores Road, Off Greams Road
Near Asan Memorial School, Chennai 600 006

NOTICE OF LOSS OF SHARE CERTIFICATES

Notice is hereby given that the following Share Certificates issued by the Company are stated to have been lost/misplaced (with or without transfer deeds) and the registered/bonafied holders thereof has applied to the Company for the issue of Duplicate Share Certificates.

Folio No.	Name of the shareholder	Cert. Nos.	Dist. Nos.	No. of shares
19	RATNA G JAIN	185	1195601 - 1195700	100
		187	1195801 - 1195900	100
		189	1196001 - 1196100	100
		191	1196201 - 1196300	100
		193	1196401 - 1196500	100

The public is hereby warned against purchasing or dealing in any way with the above Share Certificates. Any person who has any claim in respect of the said Share Certificates should lodge such claim with the Company at its registered office at the address given above within 15 days of publication of this notice, after which no claim will be entertained and the Company will proceed to issue duplicate Share Certificates in favour of the registered holder.

Place : Chennai — For Dr.Agarwal's Eye Hospital Limited
Date : 01/11/2023 — Company Secretary

அறிவிப்பு

எனது கட்சிக்காரர் M/s. கார்னர்ஸ்டோன் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், உரிமையாளர் ஜே.ஜோசுவா தேவராஜ், அலுவலகம் எண்.3, 1வது தளம், இவிஆர் பெரியார் சாலை பார்வதி நகர், பழைய பெருங்களத்தூர், சென்னை–63 அவர்கள், தாம்பரம் எஸ்ஆர்ஓ–வில் பதிவு செய்யப்பட்ட திருமதி விக்டோரியா தாமஸுக்கு ஆதரவாக திருமதி.கமலம் ஞானமார்த்தாண்டம் அவர்களால் செயல்படுத்தப்பட்ட 15.03.1976 தேதியிட்ட ஆவணம் எண்.893 என்ற அசல் பரிசுப் பத்திரம் ஜெராக்ஸ் கடைக்கு அருகில், கிறிஸ்ட் கிங் பள்ளிக்கு எதிரே, வேளச்சேரி மெயின் ரோடு, கிழக்கு தாம்பரம், சென்னை–59ல் 11.07.2023 தவற விட்டுவிட்டார். மேலே குறிப்பிட்டுள்ள அசல் ஆவணத்தை யாரேனும் கண்டுபிடித்தால், இந்த விளம்பரம் வெளியான 7 நாட்களுக்குள் ஒப்படைக்குமாறு எனது கட்சிக்காரர் கேட்டுக் கொண்டுள்ளார். தவறினால் அதையே கோர முடியாது. மேற்கூறிய வார்த்தைகள் எனக்கு தெரிந்த அளவில் உண்மை என்று எனது கட்சிக்காரர் கூறுகிறார். எனது கட்சிக்காரர் திரு. ஜே.ஜோசுவா தேவராஜ் ஜெய்குமார் சார்பாக விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது.

எஸ்.சாம்ராஜ், வழக்கறிஞர்
ப்ளாட் எண்.ஜிஎப்–4, கிருஷ்ணா அபார்ட்மெண்ட்ஸ் 182/260, வேளச்சேரி மெயின் ரோடு, கிழக்கு தாம்பரம், சென்னை–59. தொலைபேசி: 044–48585499

BEFORE THE XVII ASSISTANT CITY CIVIL JUDGE, CHENNAI
O.S. No. 6861 of 2022

M/s. Canara Bank ... Plaintiff
Vs
M/s. Melin Agencies and others ... Defendants

To,
Mr. A. Gajendra Babu
Son of Mr. E. Adhikesavalu,
No: 10/30, V.P. Colony,
North Street, Ayanavaram,
Chennai 600 023

Please take Notice that the plaintiff has filed the above suit for recovery of money. The Hon'ble XVII Assistant City Civil Judge at Chennai was pleased to order notice to you for your appearance on 16.11.2023. Please be present in person or through your counsel duly instructed by you, on 16.11.2023 at 10.30 A.M. failing which the matter will be heard and decided in your absence.

R.Dananjeyan
Counsel for Plaintiff

BEFORE THE III ADDITIONAL CITY CIVIL JUDGE, CHENNAI
O.S. No. 73 of 2023

M/s.Canara Bank ... Plaintiff
Vs
M/s. Saravana Traders, ... Defendant

To,
M/s. Saravana Traders,
Rep. by Prop. Mr. S.Jayabalan,
MIG – 29, 3rd Main Road,
TNHB, Sevvapet,
Thiruvallur 602 025

Please take Notice that the plaintiff has filed the above suit for recovery of money. The Hon'ble II Additional City Civil Judge at Chennai was pieased to order notice to you for your appearance on 30.11.2023. Please be present in person or through your counsel duly instructed by you, on 30.11.2023 at 10.30 A.M. failing which the matter will be heard and decided in your absence.

R.Dananjeyan
Counsel for Plaintiff

BEFORE THE PRINCIPAL DISTRICT JUDGE, AT CHENGALPET
O.S. No. 452 of 2021

M/s. Cartara
(erstwhile Syndicate Bank) ... Plaintiff
Vs
M/s. Joel Enterprises . .. Defendants

To,
M/s. Joel Enterprises,
Rep. by its Prop: Anthony Rose,
No: 129, College Road,
Palavanthangal, Chennai 600114
Also at:
No: 10/8 A, Roman Thottam,
1st Street, Paiavanthangal,
Chennai 600 114

Please take Notice that the plaintiff has filed the above suit for recovery of money. The Hon'ble Principal District Judge at Chengalpet was pleased to order notice to you for your appearance on 29.11.2023. Please be present in person or through your counsel duly instructed by you, on 29.11.2023 at 10.30 A.M. failing which the matter will be heard and decided in your absence.

R.Dananjeyan
Counsel for Plaintiff

IN THE COURT OF SUBORDINATE JUDGE AT TAMBARAM
I.A.No.2 OF 2023
IN
I.A.No 1 OF 2023
IN
UN.A.S.Sr.No.11585 OF 2016

Y.Jeganlal vedacyril,
Son of Yesudoss, . .Petitioner/Appellant
Vs
V.Balachander,
S/o. Late. Varadarajan
and 4 others ...Respondents/Respondents

To
1.V.Balachander,
S/o. Late.Varadarajan
2. Ms.V.Mohanadevi,
W/o.Late.Varadarajan
3. V.Mohanraj,
S/o. Late.Varadarajan
4. Ms.S.Anithadevi,
W/o.Sachidhanandham
All are residing at
No.61/1, Platinum Apartments,
Collector Nagar, Nlogappair,
Chennai - 600101.

It is submitted that the above Petitioner/Appellant had filed petition under 151 CPC to condone the delay in representation of the Memorandum of Appeal against you. It is informed that the hearing date for the above petition is posted on 17.11.2023 at 10.30A.M. You are all hereby informed to appear in person or through your counsel before the Hon'ble Subordinate Judge at Tambaram and file your objection if any, failing which the petition will be decided at your absence.

P.S.MOHANAKRISHNAN
Advocate

வருவாய் கோட்டாட்சியர் கிண்டி
ந.க.எண்.ஆ/14289/2021
இறப்பு சான்று

A. Anbazhagan, No.9, 1 Block,
Venkatapuram, Little Mount,
Saidapet, Chennai–600 015 ...மனுதாரர்

எதிரிடை

வருவாய் கோட்ட அலுவலர்,
கோட்டாட்சியர் அலுவலகம்,
கிண்டி ...எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரரின் தாய் S. Jayalakshmi A. Anbazhagan, No.9, 1 Block, Venkatapuram, Little Mount, Saidapet, Chennai–600 015 என்ற விலாசத்தில் 13.05.2010 அன்று இறந்ததை பதிவு செய்யாமல் விடுபட்டதால் அந்த இறப்பை எதிர்மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவு வழங்கக் கோரி மனுதாக்கல் செய்துள்ளார். இதன் மீது எவருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த விளம்பரம் கண்ட 15 நாட்களுக்குள் கிண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரில் எழுத்து மூலம் தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம். தவறும் பட்சத்தில் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை அறியவும்.

நேர்முக உதவியாளர்
வருவாய் கோட்ட அலுவலர்
கிண்டி

அபான் ஆப்ஷோர் லிமிடெட்
aban
பதிவு அலுவலகம்: ஜன்பிரியா கிரஸ்ட்' 113, பாந்தியன் ரோடு, எழும்பூர், சென்னை–600 008 இந்தியா
CIN:L011191N1986PLC013473 Phone: (91)(44) 49060606 Fax: (91) (44) 28195527
e-mail : abanoffshore@aban.com website : abanoffshore.com

30 செப்டம்பர் 2023–ல் முடிந்த அரைஆண்டுக்கான தணிக்கை செய்யப்படாத ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகள் அறிக்கை

ரூ. மில்லியனில்

வ எண்	விவரங்கள்	முடிந்த காலாண்டு 30.09.2023 (தணிக்கை யாகாதது)	முடிந்த ஆண்டு 31.03.2023 (தணிக்கை யானது)	முடிந்த காலாண்டு 30.09.2022 (தணிக்கை யாகாதது)
1.	செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம்	633.36	3,967.27	948.75
2.	காலத்திற்கான நஷ்டம் (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்)	(3,161.93)	(10,600.05)	(1,942.68)
3.	வரிக்கு முன் காலத்திற்கான நஷ்டம் (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	(3,161.93)	(10,600.05)	(1,942.68)
4.	வரிக்கு பின் காலத்திற்கான நிகர நஷ்டம் (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	(3,177.11)	(10,907.47)	(2,075.27)
5.	காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கி உள்ளது)	(5,952.76)	(27,842.98)	(8,708.33)
6.	சம பங்குமூலதனம் (ஒவ்வொன்றும் முக மதிப்பு ரூ.2/– முழுவதும் செலுத்தப்பட்டது)	116.73	116.73	116.73
7.	ரிசர்வுகள் (மறுமதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக) கடந்த ஆண்டு தணிக்கையான நிதிநிலை அறிக்கையில் அளிக்கப்பட்டுள்ளபடி	-	(1,95,971.23)	-
8.	பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியம் (ஒவ்வொன்றும் முக மதிப்பு ரூ.2/–) (வருடாந்திரமல்ல) (ரூபாயில்) (ஏ அடிப்படை	(54.44)	(186.50)	(42.51)
	பி) டைலூட்டட்	(54.44)	(373.04)	(42.51)

குறிப்புகள்:

(i) SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ்சுகளின் இணையதளங்கள் www.bseindia.com and www.nseindia.com மற்றும் கம்பெனியின் இணையதளம் www.abanoffshore.comல் உள்ளது.

(ii) ஏப்ரல் 1, 2016 முதல் இந்திய கணக்கியல் தரநிலைகளை (இண்ட் ஏஎஸ்) கம்பெனி ஏற்றுக்கொண்டுள்ளது மற்றும் மேற்சொன்ன தர நிலைகளில் அளிக்கப்பட்டுள்ள அங்கீகாரம் மற்றும் அளவீட்டு கொள்கைகளின்படி இந்த நிதிநிலை முடிவுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

(iii) தனியான நிதிநிலை முடிவுகள் கீழ்க்கண்டவாறு உள்ளது

வ எண்	விவரங்கள்	முடிந்த காலாண்டு 30.09.2023 (தணிக்கை யாகாதது)	முடிந்த ஆண்டு 31.03.2023 (தணிக்கை யானது)	முடிந்த காலாண்டு 30.09.2022 (தணிக்கை யாகாதது)
1.	செயல்பாடுகள் மூலம் வருமானம்	172.03	759.94	221.29
2.	வரிக்கு முன் லாபம்/(நஷ்டம்)	(546.59)	(1,011.38)	585.01
3.	காலத்திற்கான மொத்த விரிவான வருமானம்/(நஷ்டம்)	(546.57)	(1,157.49)	500.21

குழுவின் சார்பாக
இடம்: சென்னை — C P கோபால்கிருஷ்ணன்
தேதி : 1 நவம்பர், 2023 — துணை நிர்வாக இயக்குனர் மற்றும் சிஇஓ

OGP

ஓரியண்ட் க்ரீன் பவர் கம்பெனி லிமிடெட்
பதிவு அலுவலகம்: பாஸ்கான் பியூச்சரா எஸ்வி, 4வது தளம், எண்.10/1, வெங்கடநாராயணா சாலை, தி. நகர், சென்னை – 600 017. | Corporate Identity Number : L40108TN2006PLC061665

செப்டம்பர் 30, 2023–ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்

(ரூ. லட்சத்தில்)

வ எண்	விவரங்கள்	முடிந்த காலாண்டு 30/09/2023 தணிக்கை யாகாதது	முடிந்த ஆண்டு 31/03/2023 தணிக்கை யானது	முடிந்த காலாண்டு 30/09/2022 தணிக்கை யாகாதது
1	செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம்	12,410	29,021	10,824
2	காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு அயிட்டங்கள் மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்)	6,174	1,176	3,980
3	வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு அயிட்டங்கள் மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	7,500	3,510	3,501
4	வரி, விலக்கு அயிட்டங்கள் மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (நிறுத்தப்பட்ட செயல்பாடுகளுக்கு முன்)	7,500	3,510	3,501
5	நிறுத்தப்பட்ட செயல்பாடுகளிலிருந்து வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்)	-	(177)	(121)
6	தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகளிலிருந்து வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு அயிட்டங்கள் மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	7,500	3,333	3,380
7	காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானத்தை (வரிக்கு பின்) உள்ளடக்கி உள்ளது	7,409	3,490	3,261
8	சம பங்கு மூலதனம் (ஒரு பங்கின் முகமதிப்பு ரூ.10/–)	98,072	75,072	75,072
9	இதர ஈக்விடி			
10	ஒரு பங்கு சம்பாத்தியம் (அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) (ஒவ்வொன்றும் ரூ.10/–) (வருடாந்திரம் அல்ல)			
	(ஏ) தொடர் செயல்பாடுகளுக்காக அடிப்படை	0.92	0.42	0.43
	பலமிழந்தது	0.92	0.42	0.43
11	(பி) நிறுத்தப்பட்ட செயல்பாடுகளுக்காக			
	அடிப்படை	-	(0.02)	(0.01)
	பலமிழந்தது	-	(0.02)	(0.01)

குறிப்புகள்

1. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள் தணிக்கை குழுவால் பரிசீலனை செய்யப்பட்டு நவம்பர் 01, 2023 அன்று நடைபெற்ற கம்பெனியின் இயக்குனர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
2. செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015 (திருத்தப்பட்டது)ன் விதி 47ன்படி மேற்கண்ட சுருக்கம் உள்ளது. மேலும், தேவைக்கேற்ப, நிறுவனத்தின் தனியான நிதி முடிவுகளின் குறிப்பிட்ட அயிட்டங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(ரூ. லட்சத்தில்)

வ எண்	விவரங்கள்	தனியானது: முடிந்த காலாண்டு 30/09/2023 தணிக்கை யாகாதது	முடிந்த ஆண்டு 31/03/2023 தணிக்கை யானது	முடிந்த காலாண்டு 30/09/2022 தணிக்கை யாகாதது
1	நிறுவனத்தின் மொத்த டேர்ன்ஓவர்	535	2,343	616
2	காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரிக்கு முன், விலக்கு அயிட்டங்கள் மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	(291)	283	(642)
3	வரி, விலக்கு அயிட்டங்கள் மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (நிறுத்தப்பட்ட செயல்பாடுகளுக்கு முன்)	(291)	283	(642)
4	நிறுத்தப்பட்ட செயல்பாடுகளிலிருந்து வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்)	-	31	(25)
5	தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகளிலிருந்து வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்)	(291)	314	(667)
6	காலத்திற்கான மொத்த விரிவான வருமானம்/(நஷ்டம்) (காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) மற்றும் வரிக்கு பின் இதர விரிவான வருமானத்தை உள்ளடக்கி உள்ளது)	(296)	295	(665)

3. செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015 (திருத்தப்பட்டது) விதி 33–ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகள் ஸ்டாக் எக்சேஞ்ச் இணைய தளங்கள் (www.bseindia.com மற்றும் www.nseindia.com) மற்றும் கம்பெனியின் இணைய தளம் (www.orientgreenpower.com)ல் கிடைக்கும்.

இயக்குனர்கள் குழு சார்பாக
இடம் : சென்னை — T. ஷிவராமன்
தேதி : நவம்பர் 01, 2023 — நிர்வாக இயக்குனர் மற்றும் சிஇஓ
DIN: 01312018